Postal Reg.No.TN/CH/(C)/105/10-12 / MA/119/2009-2011
Posted On 17.03.2010 Licenced to Post under
WPP No.: TN/PMG/(CCR)50/10-12




நிறுவனர் : ப. ஜீவானந்தம்

ஜனசக்தி
மக்கள் நாளிதழ்




சென்னை - புதுச்சேரி புதன் மார்ச் 17, 2010 ▫ புதியதோர் உலகம் செய்வோம் ▫ ரூ.3 8 பக்கங்கள் மலர் 73 இதழ் 58

## அணு உலை விபத்து இழப்பீடு மசோதா

# இந்திய மக்களுக்கு எதிரானது

### இடதுசாரி கட்சித் தலைவர்கள் கண்டனம்

**புதுடில்லி:** அணு உலை விபத்து இழப்பீடு மசோதா மக்களுக்கு விரோதமானது என்று இடதுசாரிக் கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இடதுசாரிக் கட்சித் தலைவர்கள் கூட்டாக செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தனர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ஏ.பி.பரதன் கூறியதாவது:

விபத்து நிவாரணம் இந்தியாவின் நிலை தெளிவாக இருக்கிறது. ஆபத்தான தொழிற்சாலைகளின் உரிமையாளர்கள் கண்டிப்பான இழப்பீட்டுக்கு உட்பட்டவர்கள். நம்முடைய சட்டம் அந்த இழப்பீட்டுக்கு எந்த உச்சவரம்பையும் ஒப்புக் கொள்ளவில்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கு முழுமையான இழப்பீடு தருவது மட்டுமின்றி, சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்பட்ட இழப்புக்கும் பொறுப்பேற்று முழு செலவையும் அவர்கள் ஏற்க வேண்டும். இம்மசோதாவின் நோக்க காரண அறிக்கை கீழ்க்கண்டவாறு தெரிவிக்கிறது. மசோதா உலக அணு சக்தி இழப்பீடு அதிகார கட்டுக்குள் .நுழைய வழிவகை செய்கிறது.

இவ்வாறு பரதன் கூறினார்.

மார்க்சிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் பிரகாஷ் காரத் கூறியதாவது:

அணு உலை இழப்பீடு மசோதா அமெரிக்காவுக்கும் அந்நாட்டின் அணுசக்தி நிறுவனங்களுக்கும் சேவை செய்யும் விதமாக அமைந்துள்ளது. இழப்பீட்டுத் தொகையில் ரூ.300 கோடியை மட்டும் அணு உற்பத்தி நிறுவனத்திடம் கேட்டு மீதமுள்ள தொகையை இந்திய அரசே சுமப்பது வரி செலுத்தும் மக்களின் தலையில் கை வைப்பதாகும்.

அணு உற்பத்தித்துறையில் விபத்து ஏற்பட்டால் மக்கள்தான் பாதிக்கப்படுவார்கள். உற்பத்தி நிறுவனத்திற்கு எந்தப் பாதிப்பும் இல்லை.

இவ்வாறு பிரகாஷ் காரத் கூறினார்.

இடதுசாரிக் கட்சித் தலைவர்கள் பிரகாஷ் காரத், ஏ.பி.பரதன், அகில இந்திய பார்வர்ட் பிளாக் பொதுச் செயலாளர் தேவபிரதா பிஸ்வாஸ், புரட்சி சோஷலிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் சந்திரசூடன் ஆகியோர் கூட்டாக மத்திய அரசு மசோதாவின் எல்லா அம்சங்களையும் நன்கு ஆராய்ந்திட வேண்டுகோள் விடுத்துள்ளனர். அரசு இந்தச் சட்டத்திற்கு எதிரான நிலை எடுக்கும் எனவும், மக்களின் நலன், பாதுகாப்பு ஆகியவற்றின் காரணமாக எத்தகைய சமரசத்தையும் அரசு ஏற்காது என்றும் நம்பிக்கை தெரிவித்தனர்.



இடதுசாரி கட்சித் தலைவர்கள் ஏ.பி.பரதன், பிரகாஷ் காரத், தேவபிரதா பிஸ்வாஸ் ஆகியோர் அணுஉலை விபத்து இழப்பீடு மசோதா குறித்து கூட்டாக பத்திரிகையாளர்களை சந்தித்தனர்.

# சிறப்புக் கல்வி மண்டலமா?

### டி.ராஜா எம்.பி. கேள்வி

**புதுடில்லி:** சிறப்புப் பொருளாதார மண்டலங்களைப் போல சிறப்புக் கல்வி மண்டலங்களை ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு அமைக்கவுள்ளதா என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலங்களவை உறுப்பினர் டிராஜா கேள்வியெழுப்பியுள்ளார்.

வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களை இந்தியாவில் அனுமதிக்க மத்திய அரசு முடிவு எடுத்துள்ளது பற்றிக் குறிப்பிட்ட அவர், இது நலிந்த பிரிவினரின் நலனைப் பாதிப்பதோடு கல்வியை வணிகமாக்கும் நடவடிக்கை என்று தெரிவித்தார்.

பெருமளவிலான நலிந்த பிரிவினரை வெளியேற்றி கல்வித் துறையில் முன்பு எப்பொழுதும் இல்லாத வேற்றுமையை இது ஏற்படுத்தும் என்பதுடன் பணம் படைத்தவர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையே ஓர் புதிய இடைவெளி மோதலை ஏற்படுத்தும் என்றும் ராஜா குறிப்பிட்டார். மேலும் கல்வியை வணிகப் பொருளாக்கி தனியார் மயமாக்கும் முயற்சி இது என்றும் அவர் கூறினார்.



லாபநோக்கு இல்லாமல் எந்த வெளிநாட்டுப் பல்கலைக் கழகமும் இந்தியாவுக்குள் நுழையாது என்று கூறிய ராஜா, மற்ற வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களை விட இந்தியாவின் ஐ.ஐ.டி. மற்றும் ஐ.ஐ.எம். கல்வி நிலையங்கள் எந்த வகையில் குறைந்தவை என்று கேள்வியெழுப்பினார்.

அரசு உண்மையிலேயே தரமான கல்வி அளிக்க விரும்பினால் அதற்கான வசதிகளை விரிவாக்க வேண்டும் என்று ராஜா குறிப்பிட்டார்.

# நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் உதவியாளர் நேரடி பணி நியமனத்தை உடனே நிறுத்துக

### ஏ.ஐ.டி.யூ.சி. கோரிக்கை

**சென்னை:** தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் உதவியாளர் பணி நேரடி நியமனத்தை தடுத்து நிறுத்த வேண்டும் என்று தமிழக அரசுக்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக ஏ.ஐ.டி.யூ.சி. தொழிற்சங்க மாநிலத் தலைவர் ஏ.எம்.கோபு, மாநில பொதுச்செயலாளர் சி.சந்திரகுமார் ஆகியோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில்,

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 800 க்கும் மேற்பட்ட உதவியாளர் பணியிடங்கள் நேரடியாக நியமிப்பதென நிர்வாகம் முடிவெடுத்துள்ளது. நிரந்தரப்படுத்த வாய்ப்பில்லாமல் நேரடியாக நியமிப்பதென நிர்வாகம் முடிவெடுத்துள்ளது. நிரந்தரப்படுத்த வாய்ப்பில்லாமல் 15,20 ஆண்டுகள் தற்காலிகமாகக் கொள்முதல் நிலையத்தில் பணிபுரிந்து பல்வேறு போராட்டங்களுக்குப் பின்னர் உதவியாளர் பதவிவரை நிரந்தர காலிப்பணியிடங்கள் ஏற்படும்போது தற்காலிகமாகப் பணிபுரிபவர்களைத் தகுதிக்கேற்ப பணி நியமிப்பது என்று ஒப்பந்தம் ஏற்பட்டு அதன் அடிப்படையில் பணி நியமனங்கள் நடைபெற்று வருகின்றன.

ஊழல் புகார்களுக்கு இடமளிக்காமல் நேர்மையான முறையில் நடைபெற்ற பணி நியமனங்களில் நிர்வாகம் படிப்படியாக மாற்றம் கொண்டுவர முயற்சி செய்கிறது. சமீபத்தில் நடைபெற்ற உதவி மேலாளர், துணை மேலாளர் நேரடி பணி நியமனங்கள் பல்வேறு விரும்பத்தகாத விமர்சனங்களுக்கு உள்ளானது.

தற்போது உதவியாளர் பதவிக்குத் தகுதியுள்ள பணியாளர் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இருக்கும்போது இவர்களைப் புறக்கணித்து ஒப்பந்தத்தை மீறி நேரடி நியமனம் செய்வது பல்வேறு தேவையற்ற சர்ச்சைகளுக்கு இடமளிக்கும். பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் மூலம் நிறைவேற்றி வருகின்ற தமிழக அரசுக்குத் தேவையற்ற அவப்பெயரை உருவாக்கும். இரவு பகல் பாராது அரசின் நலத் திட்டங்களை உணர்வு பூர்வமாக நிறைவேற்றி வருகின்ற பணியாளர்களை உற்சாகமிழக்கச் செய்யும்.

எனவே பணிபுரிந்து கொண்டிருக்கின்ற பணியாளர்களைப் புறக்கணித்து உதவியாளர் நேரடி நியமனம் செய்யும் நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாகத்தின் நடவடிக்கையைத் தடுத்து நிறுத்தி தகுதியுள்ள பணியாளர்களுக்கு உதவியாளர் பணி வழங்கவும், நீண்ட அனுபவத்தைக் கணக்கில் கொண்டு மற்ற அனைத்துப் பதவி உயர்வுகளையும் தகுதியுள்ள கீழ்நிலையிலுள்ள பணியாளர்களைக் கொண்டு நிரப்பவும் நடவடிக்கை மேற்கொள்ள தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அறிக்கையில் அவர்கள் கூறியுள்ளனர்.

### மாத்தி யோசி!

கர்ணா



''யாருன்னு தெரியலை சார்! 'ஒவ்வொரு வருஷமும் பட்ஜெட்ல 'துண்டு' விழுதே... அந்த துண்டுகளெல்லாம் வச்சி என்ன பண்றீங்கோ'ன்னு கேக்குறாரு...!''

# ஏழைகளுக்கும், விவசாயிகளுக்கும் எதிரான பட்ஜெட்

### பொ.லிங்கம் எம்.பி. கண்டனம்

**புதுடில்லி:** 2010 - 11ம் ஆண்டிற்கான இந்திய பட்ஜெட்டிற்கு எதிராக நாடாளுமன்றத்தின் மக்களவையில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் பொ.லிங்கம் கடுமையான கண்டனக் குரலை எழுப்பியுள்ளார்.

இந்திய நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்துள்ளதாக நிதியமைச்சர் கூறுகிறார். ஆனால் வேலையில்லாத் திண்டாட்டமும் பட்டினிச் சாவும்தான் நாட்டில் பெருகியுள்ளது என்பதே உண்மை நிலை. அத்தியாவசியப் பொருட்களின் விலை தாறுமாறாக உயர்ந்துள்ளது. உணவுப் பொருட்களின் விலை 19.57 சதவீதமும் சர்க்கரையின் விலை 58.96 சதவீதமும், உருளைக் கிழங்கின் விலை 53.39 சதவீதமும், பருப்பு வகைகள் 45.69 சதவீதமும் உயர்ந்துள்ளது. இது திட்டக்குழுவே அளித்துள்ள தகவல் ஆகும்.

வேலையில்லாத் திண்டாட்டம் என்பது தனி நபர் பிரச்சனை என்ற நிலையிலிருந்து இன்று நாட்டின் சமூகப் பிரச்சனையாகவே உருவெடுத்துள்ளது. நாட்டில் உள்ள இளைஞர்கள் தீவிரவாதத்தின் பக்கம் தள்ளப்படுவதற்கு இது ஒரு முக்கிய காரணமாகும். நாட்டின் முதுகெலும்பாக உள்ள விவசாயம் புறக்கணிக்கப்படுகின்றது. விவசாயத்திற்கு மிக முக்கியமான நீர் வளங்களைத் திட்டமிடுவதில் அரசு தோல்வியடைந்துள்ளது. வங்கிகள் போதுமான அளவு விவசாயக் கடன்களை வழங்கவும், விவசாய விளைபொருட்களுக்குக் கட்டுப்படியாகும் விலையை நிர்ணயம் செய்யவும், விவசாயிகளுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்கான சட்டங்களை ஏற்படுத்தவும் அரசு முன்வர வேண்டும்.

நமது தேசத்தின் செல்வமெல்லாம் கருப்புப் பணமாக வெளிநாடுகளில் குறிப்பாக சுவிட்சர்லாந்து வங்கியில் பதுக்கி வைக்கப்பட்டுள்ளது. இத்தகைய வங்கிகளில் இருந்து அமெரிக்கா தகவல்களைப் பெற முடிகிறது என்றால் ஏன் அதை நம்மால் செய்ய முடியவில்லை? இது பற்றிய வெள்ளை அறிக்கையைத் தர அரசு முன்வர வேண்டும்.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சனைக்கு ஒரு நிரந்தரமான முடிவைக் காண அரசு முன்வர வேண்டும். அமெரிக்காவே இலங்கை அரசுக்கு எதிராகத் தடைகளை கொண்டுவரத் தயாராக இருக்கும்போது இந்திய அரசு மட்டும் ஏன் வேடிக்கை பார்த்துக் கொண்டுள்ளது புரியவில்லை. இலங்கை அரசைக் கண்டிக்கக் கூட இல்லை என்பது வேதனையானது. இவர்களின் மறுவாழ்விற்காக சென்ற பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இது அவர்களைச் சென்றடைந்துள்ளதா என்பதை சரிபார்க்க வேண்டும். இத்தகைய உதவிகளை நமது அமைச்சர்கள் அல்லது அதிகாரிகள் மூலமாகத்தான் செய்ய வேண்டும்.

இலங்கை அரசு சொல்வதை நம்பக்கூடாது. இந்திய மீனவர்களின் மீன்பிடி உரிமைகள் காப்பாற்றப்பட வேண்டும். அவர்கள் கொல்லப்படுவது தடுக்கப்பட வேண்டும். கச்சத்தீவை மீட்டெடுக்க வேண்டும்.

தமிழுக்கு செம்மொழி அந்தஸ்து வழங்கப்பட்ட பின்பும் அதற்கான முழு உரிமைகளும் இன்னமும் வழங்கப்படவில்லை. பிராந்திய மொழிகளைப் புறக்கணிப்பது என்பது கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிரானதாகும். நாடாளுமன்றத்தின் அனைத்து நடவடிக்கைகளிலும் தமிழ்மொழிக்கான வசதிகள் வழங்கப்பட வேண்டும்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை. அரசின் அனைத்துத் திட்டங்களின் பயனும் அவர்களுக்குக் கிடைக்கும் வகையில் உளப்பூர்வமாக நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும். முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் 142 அடியாக இருக்க வேண்டும் என்ற உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதல் இருக்கும்போதே, அதை மீறி கேரள அரசு அதற்கு எதிராகப் பல்வேறு வகைகளில் செயல்படுகிறது. இதை வேடிக்கை பார்த்துக் கொண்டு அமைதியாக எங்களால் இருக்க முடியாது. இதேபோல் ஆந்திர அரசும் பாலாற்றில் அணைகட்ட முயலுகிறது.



பெட்ரோல் மற்றும் டீசல் மீது விதிக்கப்பட்டுள்ள வரிகளை அரசு ரத்து செய்ய வேண்டும். அவற்றின் விலைகளைக் குறைக்க வேண்டும். அத்தியாவசியத் தேவையான மின்சாரத்துறையில் உற்பத்தி மற்றும் விநியோகம் ஆகியவை அரசின் கட்டுப்பாட்டிலேயே தொடர்ந்து இருக்க வேண்டும். அணுமின் சக்தியைப் போதுமான அளவு உற்பத்தி செய்யும் திறன் நமக்கே உள்ளபோது ஏன் அமெரிக்கா போன்ற நாடுகளுடன் நாம் ஒப்பந்தம் போடவேண்டும். இந்திய மக்களின் நலன்கள் காக்கப்பட வேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ஒதுக்கீட்டின் அளவு அதிகரிக்கப்பட வேண்டும். அப்போதுதான் சுகாதார மற்றும் குடிநீர்த் திட்டங்களையும் இவர்கள் மேற்கொள்ள இயலும். உள்நாட்டு மொத்த உற்பத்தியில் 5 சதவீதத்தை பொது விநியோக திட்டத்திற்காக ஒதுக்க வேண்டும். மகாத்மா காந்தி கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம், பாரத் நிர்மாண் திட்டம் போன்றவற்றிற்காக ஒதுக்கப்படும் நிதி முறையாகப் பயன்படுத்தப்பட வேண்டும். வீடற்ற ஏழைகளுக்கு வீடு கட்டிக் கொள்வதற்கான நிலங்களை வழங்க அரசு முன்வர வேண்டும். மாவட்டத்திற்கு ஒரு நவோதயா மற்றும் கேந்திரிய வித்யாலயா போன்ற மத்திய அரசின் பள்ளிகள் அமைக்கப்பட வேண்டும்.